**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 202-8500 ● தொலை நகல்: +94 (11) 243-7345
மின்னஞ்சல்: smyserhm@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

# அமெரிக்கத் தூதரகத்தின் நிதியுதவியுடனான English Language Access Program இனை நிறைவுசெய்த மாணவர்களை கௌரவிக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங்

English Access நுண் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்தமைக்காக களுத்துறை மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த 56 இடைநிலை மாணவர்களுக்கான சான்றிதழ்களை அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் மற்றும் Smart International நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் காமினி பொன்சேகா ஆகியோர் டிசம்பர் 13 ஆம் திகதி காலியில் வழங்கி வைத்தனர். அமெரிக்கத் தூதரகத்தினால் அனுசரணை வழங்கப்படும் English Access எனும் நிகழ்ச்சித்திட்டமானது ஆங்கில மொழியினைக் கிரகித்தல் மற்றும் ஆங்கில மொழியினைப் பேசும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல், தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவ திறன்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் அமெரிக்க சமூகம் மற்றும் கலாச்சாரம் பற்றிய புரிதலை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் வடிவமைக்கப்பட்ட முழுமையாக நிதியுதவியளிக்கப்படும் இருவருட நிகழ்ச்சித்திட்டமாகும். உள்நாட்டு இலங்கை ஆசிரியர்களால் நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டமானது நாடளாவிய ரீதியில் ஐந்து இடங்களில் இலங்கை இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

இவ்வைபவத்தில், மாணவர்கள் உரை நிகழ்த்தியும், நகைச்சுவையான குறுநாடகங்களை நடித்தும், “We are the World” என்ற பாடலைப் பாடியும் வைபவத்தின் விற்பன்னர்களாகச் செயற்பட்டு தங்கள் ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்தினர்.

தூதுவர் சங் மாணவர்களை வாழ்த்தியதுடன் உலகளாவிய பெருந்தொற்றிற்கு மத்தியிலும் இந்த இருவருட நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவுசெய்ததற்காக இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமான Smart International மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி கூறினார். “ஆங்கில மொழிப் புலமை என்பது இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறக்கும் என்பதை நாம்

அறிவோம். உயர்கல்விக்கும், விஞ்ஞானத்தைக் கற்பதற்கும், தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளில் வணிகம் செய்வதற்கும் ஒரு பாதையாக அது அமைகிறது. உலகெங்கிலுமுள்ள ஏனைய நாடுகளுடன் ஒரு வலுவான தொடர்பை உருவாக்க உதவுவதில் ஆங்கில மொழி மிகமுக்கியமான பங்கை வகிக்கிறது.” எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது English Access நுண் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டமானது 150 இலங்கை இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இந்த இரண்டு வருட நிகழ்ச்சித்திட்டமானது 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வழங்கப்படுவதுடன் ஆங்கில மொழித் திறன்களின் ஒரு அடித்தளத்தையும் வழங்குகிறது. இவ்வருடம் இந்நிகழ்ச்சித்திட்டத்தினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அமெரிக்க Access நுண் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் 1000இற்கும் மேற்பட்ட இலங்கையின் பழைய மாணவர்களுடன் இணைந்து கொள்கின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு lk.usembassy.gov எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.